**ஜூலை – 21**


# TNPSC துளிகள்

- இந்திய விண்வெளி ஆராய்ச்சி நிறுவனமானது (ISRO) ககன்யான் குழுமத் தொகுதி அமைப்புகளின் மூன்று முக்கிய சோதனைகளை வெற்றிகரமாக நடத்தியது.
  - இந்த சோதனைகள், கடலில் விழுந்த பிறகு குழுமத் தொகுதியை நேராக்குதல், மையப் பகுதி வழிமுறைப் பிரிப்பு மற்றும் உச்சி உறைப் பிரிப்பு உள்ளிட்ட குழுவினரின் பாதுகாப்பு அமைப்புகளில் கவனம் செலுத்தின.
- கடந்த 75 ஆண்டுகளில் ஆப்பிரிக்காவில் கண்டுபிடிக்கப்பட்ட 5-வது புதிய குரங்கு இனமான கொலோபஸ் குடும்பத்தைச் சேர்ந்த இதற்கு 'கொலோபஸ் காங்கோயென்சிஸ்' என அறிவியல் பெயரிடப்பட்டுள்ள காங்கோ ஜனநாயகக் குடியரசின் (DRC) மழைக்காடுகளில் 'லிக்வேலி' என்ற புதிய குரங்கு இனத்தை அறிவியலாளர்கள் கண்டறிந்துள்ளனர்.
- வேல்ஸ் அறிவியல், தொழில்நுட்பம் மற்றும் மேம்பட்ட ஆய்வுகள் நிறுவனமானது (VISTAS), இந்தியாவின் முதல் செயற்கை நுண்ணறிவு (AI) ஒருங்கிணைக்கப்பட்ட அடுக்குமாடி பல்கலைக்கழக வளாகத்தை சென்னையின் திருவான்மியூரில் திறந்து உள்ளது.
- காங்கோ ஜனநாயகக் குடியரசில் (DRC) பரவி வரும் எபோலாவின் பண்டிபுக்யோ (Bundibugyo) வகைக்கு எதிராக உருவாக்கப்பட்ட புதிய எபோலா தடுப்பூசியின் மனிதப் பரிசோதனைகளை ஆக்ஸ்போர்டு பல்கலைக்கழகம் தொடங்கியுள்ளது.
- பெங்களூருவில் உள்ள நானோ மற்றும் மென்மையான பொருள் அறிவியல் மையத்தின் (CeNS) அறிவியலாளர்கள், நச்சு வாயுவை நிகழ்நேரத்தில் கண்டறிவதற்கான அதி-உணர்திறன் கொண்ட அணியக் கூடிய அம்மோனியா உணரியை உருவாக்கியுள்ளனர்.
- மேற்கிந்திய தீவுகளின் புகழ்பெற்ற கிரிக்கெட் வீரர் சர் கார்பீல்ட் சோபர்ஸ் தனது 89 வயதில் காலமானார்.
- ஹைதராபாத்தை தளமாகக் கொண்ட ஸ்கைரூட் ஏரோஸ்பேஸ் நிறுவனம், ஆகமன் திட்டத்தின் கீழ் விக்ரம்-1 ஏவுகலத்தை வெற்றிகரமாக விண்ணில் செலுத்தி, புவியின் தாழ் சுற்றுப்பாதையில் (LEO) சரக்குகளை நிலைநிறுத்திய இந்தியாவின் முதல் தனியார் ஏவுகலம் என்ற பெருமையைப் பெற்றது.
- நீதித்துறையின் செயல்திறனை மேம்படுத்துவதற்காகவும், நீதியை எளிதில் பெறுவதற்காகவும் ஹரியானாவின் குருகிராமில் 'நீதி கோபுரம்' என்ற மாவட்ட நீதிமன்ற வளாகத்தை இந்தியத் தலைமை நீதிபதி (CJI) சூர்ய காந்த் திறந்து வைத்தார்.
  - இந்தப் புதிய வளாகத்தில் பஞ்சாப் மற்றும் ஹரியானா உயர் நீதிமன்றத்தின் கீழ் ஒரு சர்வதேச நடுவர் மையம், பெண் வழக்கறிஞர்களுக்கான லேடீஸ் பார் ரூம் / பெண் வழக்கறிஞர்கள் ஓய்வறை மற்றும் குழந்தைகள் காப்பகம் ஆகியவை இடம் பெற்றுள்ளன.
- தென்னாப்பிரிக்காவின் முதல் கறுப்பின அதிபரான நெல்சன் மண்டேலாவின் பிறந்த நாளைக் குறிக்கும் வகையில் நெல்சன் மண்டேலா தினம் ஜூலை 18 அன்று அனுசரிக்கப்படுகிறது.
  - நிறவெறியை முடிவுக்குக் கொண்டு வருவதில் அவர் ஆற்றிய பங்கிற்காக அமைதிக்கான நோபல் பரிசை (1993) பெற்றார்.

# தமிழ்நாட்டுச் செய்திகள்

## தமிழ்நாட்டில் மாநிலம் உருவான தினத்தின் வரலாற்றுக் கொண்டாட்டங்கள்

- தமிழ்நாடு அரசு ஒவ்வொரு ஆண்டும் ஜூலை 18 மற்றும் நவம்பர் 1 ஆகிய இரு தினங்களிலும் மாநில வரலாற்று தினத்தைக் கொண்டாட முடிவு செய்துள்ளது.
- ஜூலை 18 என்பது 1967 ஆம் ஆண்டு முன்னாள் முதலமைச்சர் சி.என். அண்ணாதுரை அவர்கள் மெட்ராஸ் மாகாணத்திற்கு 'தமிழ்நாடு' என்று பெயர் மாற்றுவதற்கான தீர்மானத்தை சட்டமன்றத்தில் கொண்டு வந்த நாளாகும்.
- நவம்பர் 1 என்பது 1956 ஆம் ஆண்டு மாநில மறுசீரமைப்புச் சட்டம் நடைமுறைக்கு வந்த பிறகு, தற்போதைய தமிழ்நாடு மாநிலம் உருவான நாளாகும்.
- முந்தைய திராவிட முன்னேற்றக் கழக (திமுக) அரசு ஜூலை 18-ஐ தமிழ்நாடு தினமாகவும், நவம்பர் 1-ஐ மொழிப்போர் தியாகிகள் தினமாகவும் அனுசரித்து வந்தது.
- இந்தப் புதிய முடிவு மாநிலத்தின் பெயர் மாற்றம் மற்றும் அதன் எல்லை உருவாக்கம் ஆகிய இரண்டின் வரலாற்று முக்கியத்துவத்தையும் அங்கீகரிக்கிறது.




## e-Zero முதல் தகவல் அறிக்கை அமைப்பு

- இணையவழி நிதி மோசடி வழக்குகளை விரைவாகப் பதிவு செய்து விசாரிப்பதற்காக தமிழ்நாடு அரசு e-Zero முதல் தகவல் அறிக்கை (FIR) முறையை நடைமுறைப் படுத்தி உள்ளது.
- 1930 என்ற தேசிய இணையவழி குற்றத்திற்கு எதிரான உதவி எண் மூலம் தெரிவிக்கப் படும் என்பதோடு ₹1 லட்சத்திற்கும் அதிகமான இழப்பு ஏற்பட்ட இணையவழி மோசடிப் புகார்கள், e-Zero FIR பதிவுக்காக குற்றம் மற்றும் குற்றவாளிகளை கண்காணிக்கும் வலைப் பின்னல் மற்றும் அமைப்புகளுடன் (CCTNS) தானாகவே இணைக்கப் படும்.
- பிராந்திய அதிகார வரம்பைப் பொருட்படுத்தாமல் Zero FIR-களை மின்னணு முறையில் பதிவு செய்ய அனுமதிக்கும் பாரதிய நாகரிக் சுரக்சா சன்ஹிதா (BNSS) 2023-இன் பிரிவு 173-இன் கீழ் இந்த அமைப்பு அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.
- e-Zero FIR மின்னணு முறையில் சம்பந்தப்பட்ட இணையவழி குற்றப் பிரிவு சார்ந்த காவல் நிலையத்திற்கு மாற்றப்பட்டு, சரிபார்ப்புக்குப் பிறகு வழக்கமான FIR ஆக

மாற்றப் படுகிறது.

- ❖ மத்திய உள்துறை அமைச்சகத்தின் (MHA) ஆதரவுடன் தொடங்கப்பட்ட இந்த முன்னெடுப்பானது, விசாரணைகளை விரைவுபடுத்துதல், Golden Hour நேரத்தில் மோசடியான பரிவர்த்தனைகளை முடக்குதல், டிஜிட்டல் சான்றுகளைப் பாதுகாத்தல் மற்றும் மோசடி செய்யப்பட்ட நிதியை மீட்பதை மேம்படுத்துதல் ஆகியவற்றை நோக்கமாகக் கொண்டுள்ளது.

**Tamil Nadu government implements e-Zero FIR system for cybercrime cases**

The government of Tamil Nadu has implemented the e-Zero FIR system to facilitate the registration and investigation of cyber financial fraud cases reported through the Cyber Crime Helpline 1930. Integration of the 1930 Helpline with CCTNS eliminates duplicate data entry, enables faster case registration and seamless jurisdictional transfer.

## கரிவலம்வந்த நல்லூர் அகழாய்வுக் கண்டுபிடிப்புகள்




- ❖ தென்காசி மாவட்டம் கரிவலம்வந்தநல்லூரில் நடைபெற்ற அகழாய்வில் கற்காலம் முதல் சங்க காலம் வரை தொடர்ச்சியாக மனிதர்கள் வாழ்ந்ததற்கான சான்றுகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.
- ❖ தமிழ்நாடு மாநிலத் தொல்லியல் துறை (TNSDA) மூலம் இந்த அகழாய்வு மேற்கொள்ளப் பட்டு வருகிறது என்ற நிலையில் இதற்காக அந்த இடத்தில் 18 அகழாய்வுக் குழிகள் தோண்டப் பட்டுள்ளன.
- ❖ நீண்ட காலக் குடியிருப்பு மற்றும் தொழில்துறை செயல்பாட்டைக் குறிக்கும் நுண் கற்

காலக் கருவிகள், செங்கல் கட்டுமானங்கள், இரும்பு வேலை செய்வதற்கான எச்சங்கள் மற்றும் கைவினைப் பொருட்கள் தயாரிப்பு பட்டறைகள் ஆகியவற்றை தொல்லியலாளர்கள் கண்டுபிடித்துள்ளனர்.

- சங்க காலத்தில் இந்த இடம் கைவினைப் பொருட்கள் உற்பத்தி, இரும்புத் தொழில் நுட்பம் மற்றும் வணிகத்திற்கான ஒரு முக்கிய மையமாக இருந்ததை இந்தக் கண்டுபிடிப்புகள் உணர்த்துகின்றன.
- இந்த அகழாய்வானது, கீழடி அகழாய்வு உட்பட தமிழ்நாட்டின் விரிவான தொல்லியல் திட்டத்தின் ஒரு பகுதியாகும்.

# தேசியச் செய்திகள்

## செமிகான் 2.0 திட்டம்

- இந்தியாவின் குறைக்கடத்திச் சூழல் அமைப்பை வலுப்படுத்துவதற்காக ₹1.27 லட்சம் கோடி மதிப்பீட்டிலான செமிகான் 2.0 திட்டத்திற்கு மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.
- குறைக்கடத்தி வடிவமைப்பு, உற்பத்தி மற்றும் கண்டுபிடிப்புகளுக்கான உலகளாவிய மையமாக இந்தியாவை மாற்றுவதை இத்திட்டம் நோக்கமாகக் கொண்டுள்ளது.
- குறைக்கடத்தி உற்பத்தி சார்ந்த துறைக்கு நீண்டகால கொள்கை ஆதரவை வழங்குவதன் மூலம் செமிகான் இந்தியா திட்டத்தின் (Semicon 1.0) அடிப்படையில் இது உருவாக்கப்பட்டுள்ளது.
- சில்லு வடிவமைப்பு, உற்பத்தி உபகரணங்கள் மற்றும் பொருட்கள், உற்பத்தி மையங்கள், குறைக்கடத்தி பொதிகட்டுதல்/பேக்கேஜிங், ஆராய்ச்சி மற்றும் மேம்பாடு (R&D) மற்றும் திறன் மேம்பாடு ஆகிய ஆறு பகுதிகளில் செமிகான் 2.0 கவனம் செலுத்துகிறது.
- ஒரு முழுமையான குறைக்கடத்திச் சூழல் அமைப்பை உருவாக்குவதையும், உலகளாவிய விநியோகச் சங்கிலிகளைச் சார்ந்திருப்பதைக் குறைப்பதையும் இத்திட்டம் நோக்கமாகக் கொண்டுள்ளது.



## விக்ஷித் கிருஷிக்கான செயல்பாட்டுத் திட்டம்

- 'விக்ஷித் பாரத் 2047'-இன் முக்கியத் தூணாக, 2026 ஆம் ஆண்டு ஜூலை 16 அன்று இந்திய வேளாண் ஆராய்ச்சி சபையின் (ICAR) 98-வது நிறுவன தின விழாவில் 'விக்ஷித் கிருஷிக்கான செயல்பாட்டுத் திட்டம்' வெளியிடப்பட்டது.
- இந்திய விவசாயத்தை பருவநிலை மாறுபாட்டைத் தாங்கக்கூடியதாகவும், தொழில் நுட்பம் சார்ந்ததாகவும், உலக அளவில் போட்டித்தன்மை கொண்டதாகவும் மாற்றுவதை இது நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இந்த வழிகாட்டுதல் திட்டத்தில் 100 பருவநிலைக்கேற்ற திறமையான கிராமங்கள், ஒரு நிறுவனம்-ஒரு பெரிய கண்டுபிடிப்பு, 10 கோடி விவசாயிகளைத் தொழில்நுட்ப ரீதியாகச் சென்றடைதல், திட்டம் ICAR-100, ICAR திறந்த டிஜிட்டல் அறிவுத் தளம், போலி விதை மற்றும் பூச்சிக்கொல்லி கட்டுப்பாடு மற்றும் 2029-ஆம் ஆண்டுக்குள் ₹10,000 கோடி நிதி ஆதாரம் திரட்டுதல் ஆகிய 7 இலக்குகள் உள்ளன.
- ICAR-100 திட்டமானது, வேளாண் அறிவியல் மையங்களை (KVKs) கண்டுபிடிப்பு, பருவ நிலை ஆலோசனை மற்றும் விவசாயிகளுக்கான ஆதரவு மையங்களாக மாற்றும்.
- டிஜிட்டல் அறிவுத் தளம் இலவச பயிர் ஆலோசனைகள், வானிலை முன்னறிவிப்புகள், மண் பரிசோதனை மற்றும் சந்தை தகவல்களை வழங்கும்.





## இந்தியாவில் பாராகுவாட் டைகுளோரைடுக்கு தடை



- பூச்சிக்கொல்லிகள் சட்டம், 1968-இன் கீழ், நச்சுத்தன்மை தொடர்பான இறப்புகளுடன் தொடர்புடைய 'பாராக்குவாட் டைகுளோரைடு' (Paraquat Dichloride) என்ற களைக் கொல்லிக்கு மத்திய அரசு தடை விதித்துள்ளது.
- இந்தத் தடையானது, இந்தியாவில் பாராக்குவாட் டைகுளோரைடு தயாரிப்பு, இறக்குமதி, போக்குவரத்து, விநியோகம், விற்பனை மற்றும் பயன்பாடு ஆகியவற்றைத் தடை செய்கிறது.
- சுகாதார அபாயங்கள், அதிக இறப்பு விகிதங்கள் மற்றும் அதற்கான குறிப்பிட்ட மாற்று மருந்து இல்லாமை ஆகிய காரணங்களைச் சுட்டிக்காட்டி பதிவுக் குழு மற்றும் நிபுணர் குழு அளித்த பரிந்துரைகளின் அடிப்படையில் இந்த முடிவு எடுக்கப் பட்டு உள்ளது.
- பாராக்குவாட் டைகுளோரைடு ஏற்கனவே உலகளவில் 70-க்கும் மேற்பட்ட நாடுகளில் தடை செய்யப் பட்டுள்ளது அல்லது கடுமையாகக் கட்டுப்படுத்தப்பட்டுள்ளது.
- அறுவடைக்குப் பிறகு களை கட்டுப்பாட்டிற்காக விவசாயிகளால் இந்த களைக் கொல்லி பொதுவாகப் பயன்படுத்தப் படுகிறது ஆனால் இதன் மூலம் ஏற்படும் நச்சுத் தன்மை மற்றும் பாதிப்புகள் குறித்து கவலைகள் எழுப்பப்பட்டுள்ளன.

## நிலுவையில் உள்ள வழக்குகளுக்கான சிறப்பு அமர்வுகள்





- நீதித்துறை தேக்கத்தைக் குறைப்பதற்காகவும், நீண்டகாலமாக நிலுவையில் உள்ள சிவில் மற்றும் கிரிமினல் வழக்குகளை பிரத்தியேகமாக விசாரிப்பதற்காகவும் இந்தியத் தலைமை நீதிபதி (CJI) சூர்ய காந்த் உச்ச நீதிமன்றத்தில் நான்கு சிறப்பு அமர்வுகளை அமைத்துள்ளார்.
- நீதிபதி பி.கே. மிஸ்ரா மற்றும் நீதிபதி எஸ்.வி.என். பட்டி தலைமையிலான இரண்டு சிவில் அமர்வுகளானது நீண்டகாலமாக நிலுவையில் உள்ள சிவில் வழக்குகளில் கவனம் செலுத்தும், அதே நேரத்தில் நீதிபதி மனோஜ் மிஸ்ரா மற்றும் நீதிபதி உஜ்ஜல் புயான் தலைமையிலான இரண்டு குற்றவியல் அமர்வுகளானது பழைய குற்றவியல் வழக்குகளைக் கையாளும்.
- பழைய வழக்குகளைத் தடையின்றி விசாரிப்பதை உறுதி செய்வதற்காக இந்த அமர்வுகள் செவ்வாய், புதன் மற்றும் வியாழன் ஆகிய நாட்களில் செயல்படும்.
- சமீபத்திய ஆண்டுகளில் உச்ச நீதிமன்றம் அதிகளவில் வழக்குகளைத் தீர்த்து வைத்தாலும், நிலுவையில் உள்ள வழக்குகளின் எண்ணிக்கை 90,000-ஐத் தாண்டி உள்ளதால், நிலுவையில் உள்ள வழக்குகளைக் கையாளும் நோக்கத்தைக் கொண்டு இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

- மின்னணு-தாக்கல், மெய்நிகர் விசாரணைகள் மற்றும் நீதிமன்றங்களை எளிதில் அணுகக் கூடிய நிலை ஆகியவை புதிய வழக்குகளைப் பதிவு செய்வதில் அதிகரிப்பைக் கொண்டு வந்துள்ளதுடன் இது வழக்குகளை ஏற்பதற்கும் தீர்த்து வைப்பதற்கும் இடையே இடைவெளியை உருவாக்கியுள்ளது.

# அறிவியல் மற்றும் தொழில்நுட்பச் செய்திகள்

## ட்ரிடியம் அகற்றுவதில் புதிய சாதனை

- சீனாவைச் சேர்ந்த ஓர் ஆய்வுக் குழு, அணுஉலைக் கழிவுநீரில் இருந்து ட்ரிடியத்தை விரைவாக அகற்றக்கூடிய உலோக-கரிம கட்டமைப்பு (MOF) அடிப்படையிலான புதிய பொருளை உருவாக்கியுள்ளது.
- ஹைட்ரஜனின் கதிரியக்க ஐசோடோப்பான ட்ரிடியம் கலந்த நீர் சாதாரண நீரின் வேதியியல் பண்புகளையே கொண்டிருப்பதால் இதனைப் பிரித்தெடுப்பது கடினம்.
- $NH_2$-MIL-101(Cr) எனப்படும் இந்தப் புதிய பொருள், ஒரு துருப்பிடிக்காத எஃகு வலை மீது பூசப்பட்டு, பிரித்தெடுப்பதற்குத் தேவையான மேற்பரப்பை 32 மடங்கு அதிகரித்து உள்ளது.
- பொருளுக்குள் உள்ள குரோமியம்-ஆக்ஸிஜன் தொகுப்புகள் ட்ரிடியம் அணுக்களைப் பிடித்து சாதாரண ஹைட்ரஜன் அணுக்களுடன் பரிமாற்றம் செய்ய உதவுகின்றன.
- அணுக்கரு உலைகளில் இருந்து ட்ரிடியம் வெளியேற்றத்தைக் குறைக்கவும், அணு உலைக் கழிவுநீர் மேலாண்மையை மேம்படுத்தவும் இந்த தொழில்நுட்பம் உதவுகிறது.




# பிரபலமானவர்கள், விருதுகள், மற்றும் நிகழ்வுகள்

## 72வது தேசிய திரைப்பட விருதுகள் 2026

- 2024 ஆம் ஆண்டில் மத்திய திரைப்பட சான்றிதழ் வாரியத்தால் (CBFC) சான்றளிக்கப்பட்ட திரைப்படங்களை அங்கீகரித்து 72வது தேசிய திரைப்பட விருதுகளை வென்றவர்களை மத்திய தகவல் மற்றும் ஒளிபரப்பு அமைச்சகம் அறிவித்தது.
- 72-வது தேசிய திரைப்பட விருதுகளில் Article 370 சிறந்த திரைப்பட விருதையும், 'ராயன்' சிறந்த தமிழ்த் திரைப்பட விருதையும் வென்றுள்ளன.
- சிறந்த நடிகருக்கான விருதை கார்த்திக் ஆரியன் (சந்து சாம்பியன்) மற்றும் மம்மூட்டி

(பிரமயுகம்) ஆகியோர் கூட்டாகப் பெற்றனர்.

- யாமி கவுதம் Article 370 படத்திற்காகச் சிறந்த நடிகைக்கான விருதை வென்றார்.
- 'அமரன்' படத்திற்காக ராஜ்குமார் பெரியசாமி சிறந்த இயக்குநருக்கான விருதை வென்றார். அதே சமயம் 'கல்கி 2898 AD' திரைப்படம் சிறந்த முழுமையான பொழுதுபோக்குத் திரைப்படத்திற்கான விருதைப் பெற்றது.
- சிறந்த திரைப்படப் பிரிவில் 'புஷ்பா 2' சிறந்த திரைக்கதைக்கான விருதையும், 'அமரன்' சிறந்த படத்தொகுப்புக்கான விருதையும் பெற்றன.




★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★